**வகுப்பு : 8-ம் வகுப்பு**

**பாடம் : தமிழ்**

**இயல் - 2**

**ஓடை, கோணக்காத்துப்பாட்டு, நிலம் பொது**

**சிறுவினாக்கள்:**

1. **ஓடையின் பயன்களாக வாணிதாசன் கூறுவன யாவை?**

   **ஓடையின் பயன்களாக வாணிதாசன் கூறுவன:**

   ❖ நன்செய், புன்செய் நிலங்களுக்கு நீர்வளம் தந்து பயிர்களைச் செழிக்கச் செய்கிறது.

   ❖ அவ்வாறு விளைந்த பயிர்கள்மூலம் உணவு தந்து நாட்டின் வறுமையைப் போக்குகிறது.

   ❖ குளிர்ச்சியைத் தரும் புற்களுக்கு இன்பம் சேர்க்கிறது.

   ❖ நெஞ்சத்தில் இரக்கம் இல்லாதவர் வெட்கப்படுமாறு இடையறாது ஓடித் தன் உழைப்பைக் தருகிறது.

2. **புயல் காற்றினால் மரங்களுக்கு ஏற்பட்ட நிலைகளாகப் பாடல் குறிப்பிடும் கருத்துகள் யாவை?**

   **புயல் காற்றினால் மரங்களுக்கு ஏற்பட்ட நிலைகளாகப் பாடல் குறிப்பிடும் கருத்துகள்:**

   ❖ புயல் காற்றினால் வாங்கல் என்னும் ஊரில் அழகாய் வைக்கப்பட்ட தென்னம்பிள்ளைகள் எல்லாம் வீணாயின.

   ❖ அழிவில்லாத காங்கேய நாட்டின் மேட்டுப்பகுதிகளில் வளர்ந்திருந்த பருத்திச்செடிகள் எல்லாம் சிதைவடைந்து வெறும் குச்சிகளாய் மாறின.

   ❖ தொண்டைமான் நாட்டில் சிறப்பாய் வைக்கப்பட்ட மரங்கள் அனைத்தும் ஒடிந்து சின்ன பின்னமாய் ஆயின.

3. **கோணக்காற்றால் வீடுகளுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் யாவை?**

   **கோணக்காற்றால் வீடுகளுக்கு ஏற்பட்ட பாதிப்புகள்:**

   ❖ திரண்டு எழுந்த மேகங்களால் உருவான காற்று வேகமாய் அடித்ததால் பெரிய வீடுகளின் கூரைகளெல்லாம் மொத்தமாய்ப் பிரிந்து சரிந்தன.

- ❖ அழகிய சுவர்களை உடைய மாடி வீடுகள் அடியோடு விழுந்தன.

4. **நீர்நிலைகள் குறித்துச் சியாட்டல் கூறியுள்ளவற்றை எழுதுக.**

   **நீர்நிலைகள் குறித்துச் சியாட்டல் கூறியுள்ளவை:**

   - ❖ ஏரிகளில் பிரதிபலிக்கும் நினைவு எச்சங்கள், எம் மக்களின் வாழ்வியல் நிகழ்வுகளை நினைவுகூர்பவை ஆகும்.
   - ❖ இந்த நீரின் முணுமுணுப்புகளை எம் பாட்டன்மார்களின் குரல்களேயாகும்.
   - ❖ இந்த ஆறுகள் யாவும் எம் உடன்பிறந்தவர்கள்.
   - ❖ இவர்கள்தாம் எமது தாகத்தைத் தீர்க்கிறார்கள்.
   - ❖ எம்மக்களின் தோணிகளையும் இவர்களே சுமந்து செல்கின்றனர்.
   - ❖ குழந்தைகளுக்கு உணவளிக்கின்றனர்.
   - ❖ இங்குள்ள ஓடைகளிலும் ஆறுகளிலும் ஓடும் நீரானது எமது மூதாதையரின் குருதியாகும்.

5. **எவையெல்லாம் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவை என்று சியாட்டல் கூறுகிறார்?**

   **ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவை என்று சியாட்டல் கூறுவது:**

   - ❖ நாங்கள் இந்த மண்ணுக்கு உரியவர்கள்.
   - ❖ இந்த மண்ணும் எமக்கு உரியதாகும்.
   - ❖ ஏனெனில் இதுவே எமக்குத் தாயாகும்.
   - ❖ இங்குள்ள நறுமணம் மிகுந்த மலர்கள் யாவும் எம் சகோதரிகள் ஆவர்.
   - ❖ மான்கள், குதிரைகள், கழுகுகள் போன்ற அனைத்தும் எம் சகோதரர்கள் ஆவர்.
   - ❖ மலைமுகடுகள், பசும்புல்வெளிகளின் பனித்துளிகள், மட்டக்குதிரைகளின் உடல் சூட்டின் இதமான கதகதப்பு, இங்குள்ள மனிதர்கள் எல்லாரும் ஒரே குடும்பம் என்று சியாட்டல் கூறுகிறார்.

**அறிந்து பயன்படுத்துவோம்:**

**கொடுக்கப்பட்டுள்ள தொடர்களின் வகையைக் கண்டறிந்து எழுதுக:**

1. முக்காலமும் உணர்ந்தவர்கள் நம் முன்னோர்கள் - செய்தித்தொடர்
2. கடமையைச் செய் - விழைவுத்தொடர்
3. பாரதியார் பாடல்களின் இனிமைதான் என்னே! - உணர்ச்சித்தொடர்
4. நீ எத்தனை புத்தகங்களைப் படித்திருக்கிறாய்? - வினாத்தொடர்

**தொடர்களை மாற்றுக:**

1. நேற்று நம் ஊரில் மழை பெய்தது. **(வினாத்தொடராய் மாற்றுக)**
   நேற்று நம் ஊரில் மழை பெய்ததா?
2. காடு மிகவும் அழகானது. **(உணர்ச்சித் தொடராய் மாற்றுக)**
   ஆ! காட்டின் அழகுதான் என்னே!
3. ஆ! பூனையின் காலில் அடிபட்டுவிட்டதே! **(செய்தித்தொடராய் மாற்றுக)**
   பூனையின் காலில் அடிபட்டுவிட்டது.
4. முகில்கள் திரண்டால் மழை பெய்யும் அல்லவா? **(செய்தித்தொடராய் மாற்றுக)**
   முகில்கள் திரண்டால் மழை பெய்யும்.
5. அதிகாலையில் துயில் எழுவது நல்லது. **(விழைவுத்தொடராய் மாற்றுக)**
   அதிகாலையில் துயில் எழு.
6. காட்டுவளம் பெருகினால் நாட்டுவளம் பெருகும். **(வினாத்தொடராய் மாற்றுக)**
   காட்டுவளம் பெருகினால் நாட்டுவளம் பெருகுமா?

**வினைமுற்றுக்கு உரிய வேர்ச்சொல்லை எழுதுக:**

1. நடக்கிறது - நட
2. போனான் - போ
3. சென்றனர் - செல்
4. உறங்கினாள் - உறங்கு
5. வாழிய - வாழ்
6. பேசினாள் - பேசு
7. வருக - வா
8. தருகின்றனர் - தா
9. பயின்றாள் - பயில்
10. கேட்டார் - கேள்

கட்டுரை எண் - 2

**விளையாட்டுப்போட்டியில் வெற்றி பெற்ற உங்கள் நண்பருக்குப் பாராட்டுக்கடிதம் எழுதுக.**

**கஸ்தம்பாடி,**

24. 07. 2019.

அன்புத் தோழன் _______________, உன்னை என்றும் மறவாத நண்பன் _______________ எழுதும் மடல். நீ நலமா? உன் பெற்றோரும் தம்பியும் நலமா? நானும் எங்கள் வீட்டில் உள்ளோர் எல்லோரும் நலம்.

உங்கள் பள்ளியில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளுள் நூறுமீட்டர் ஓட்டப்பந்தயம், உயரம் தாண்டுதல், நீளம் தாண்டுதல், தொடர் ஓட்டப்பந்தயம் ஆகியவற்றில் நீ முதலிடம் பெற்று வெற்றி பெற்றதை அறிந்து நானும் என் பெற்றோரும் பெரிதும் மகிழ்ச்சியடைந்தோம். உனக்கு எங்கள் பாராட்டுகள்.

நீ இன்னும் பயிற்சியெடுத்து, மண்டல அளவிலும், மாவட்ட அளவிலும் வெற்றி பெற்றுத் தேசிய அளவில் போட்டிகளில் விளையாட வேண்டும். அதிக வெற்றிகளைக் குவித்து, நீ படிக்கும் பள்ளிக்கும், உன் பெற்றோருக்கும் பெருமை சேர்க்க வேண்டும் என்று உன்னை வாழ்த்துகிறேன்.

இப்படிக்கு,

அன்புத்தோழன்,

_______________.

**உறைமேல் முகவரி:**

தமிழ்ச்செல்வன்,
எண் 5, பாரதியார் தெரு,
சென்னை – 600 005.